# பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல மாணவ / மாணவிகளுக்கான கல்வி உதவித்தொகை திட்டங்கள்

| திட்டத்தின் பெயர் | நிபந்தனைகள் | தகுதியானவர்களுக்கு வழங்கப்படும் கல்வி உதவித்தொகை விவரங்கள் |
|---|---|---|
| **1. பள்ளி மேற்படிப்பு கல்வி உதவித்தொகை திட்டம்**<br>அரசு மற்றும் அரசு உதவி பெறும் கல்லூரிகளில் பட்ட மேற்படிப்பு, பட்டப் படிப்பு, தொழிற்கல்வி மற்றும் ஆராய்ச்சி படிப்பு பயிலும் பிவ, மிபிவ(ம) சீர்மரபினர் நல மாணவ / மாணவியர்கள்<br>சுயநிதி தொழில் கல்லூரிகளில் அரசு ஒதுக்கீட்டில் தேர்வு செய்யப்படும் மாணவ/மாணவியர்கள் | பெற்றோர்களது ஆண்டு வருமானம் ரூ.2,00,000/-க்கு மிகாமல் இருக்க வேண்டும். | ■ கற்பிப்பு கட்டணம் மற்றும் சிறப்புக் கட்டணம் - அரசு கல்வி நிறுவனங்களுக்கு நிர்ணயித்துள்ளவாறு முழுமையாக ஈடுசெய்யப்படுகிறது<br>■ தேர்வுக் கட்டணம் - முழுமையாக<br>■ புத்தகக்கட்டணம் - கல்வி உதவித் தொகை அறிவிக்கையில் குறிப்பிட்டுள்ளவாறு வழங்கப்படுகிறது<br>■ மேலும் கல்வி நிலையங்களே நடத்தும் விடுதிகளில் தங்கிப்பயிலும் மாணவ, மாணவியருக்கு மேற்படி கல்வி உதவித் தொகையுடன் உண்டி உறையுள் கட்டணம் தொழிற்கல்வி - மாதம் ஒன்றுக்கு ரூ.350-ம்<br>■ இடிஐ / பட்டயப்படிப்பு மற்றும் முதுகலை மாணவ, மாணவியருக்கு மாதம் ஒன்றுக்கு ரூ.225/- வீதம் ஆண்டிற்கு 10 மாதங்களுக்கு வழங்கப்படுகிறது. |
| **2. இலவசக் கல்வி உதவித்தொகைத் திட்டம்**<br>**i) மூன்றாண்டு பட்டப்படிப்புகளுக்கு**<br>அரசு மற்றும் அரசு உதவிபெறும் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் மூன்றாண்டு பட்டப்படிப்பு பயிலும் பிவ, மிபிவ(ம) சீர்மரபினர் நல மாணவ / மாணவியர்கள் | நிபந்தனை ஏதும் இல்லை | ■ சிறப்புக் கட்டணம் மற்றும் திரும்பப் பெற இயலாத கட்டாயக் கட்டணம் - அரசு கல்வி நிறுவனங்கள் நிர்ணயித்துள்ளவாறு முழுமையாக ஈடுசெய்யப்படுகிறது<br>■ புத்தகக்கட்டணம் - கல்வி உதவித் தொகை அறிவிக்கையில் குறிப்பிட்டுள்ளவாறும்<br>■ தேர்வுக் கட்டணம் - முழுமையாகவும் வழங்கப்படுகிறது. |
| **ii) மூன்றாண்டு பட்டயப் படிப்புகளுக்கு (டிப்ளமோ)**<br>அரசு மற்றும் அரசு உதவி பெறும் தொழில்நுட்ப பயிலகங்களில் மூன்றாண்டு பட்டயப்படிப்பு பயிலும் பிவ, மிபிவ(ம) சீர்மரபினர் நல மாணவ / மாணவியர்கள்<br>**iii) தொழிற்கல்வி படிப்புகளுக்கு (மருத்துவம், பொறியியல், விவசாயம் போன்ற)**<br>அரசு மற்றும் அரசு உதவி பெறும் தொழில் கல்லூரிகள் மற்றும் சுயநிதி தொழில் கல்லூரிகளில் அரசு ஒதுக்கீட்டில் தேர்வு செய்யப்படும் மாணவ /மாணவியர்கள் | 1. பெற்றோர்களது ஆண்டு வருமானம் ரூ.2,00,000/-க்கு மிகாமல் இருக்க வேண்டும்.<br>2. குடும்பத்தில் வேறு பட்டய/பட்டதாரி எவரும் இருக்கக் கூடாது. | ■ உண்டி உறையுள் கட்டணம் - கல்வி கல்வி நிறுவனங்களுடன் இணைத்துள்ள விடுதிகளில் தங்கிப்பயிலும் மாணவ, மாணவியருக்கு மாதம் ரூ.175- வீதம் 10 மாதங்களுக்கு உண்டி உறையுள் கட்டணம் வழங்கப்படுகிறது<br>■ பட்டயப்படிப்பு - ரூ.225- வீதம் ஆண்டிற்கு 10 மாதங்களுக்கு வழங்கப்படுகிறது.<br>■ தொழிற்படிப்பு - மாதம் ஒன்றுக்கு ரூ.350/- வீதம் 10 மாதங்களுக்கு வழங்கப்படுகிறது. |

மாணவ / மாணவியர்கள் கல்வி உதவித்தொகை விண்ணப்பங்களை சம்பந்தப்பட்ட கல்வி நிறுவனங்களின் மூலமாக சமர்ப்பிக்க வேண்டும். மேலும் இது குறித்த சந்தேகங்களுக்கும் மற்றும் விண்ணப்ப படிவங்களுக்கு சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சியர் அலுவலகங்களில் உள்ள மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர்களை தொடர்பு கொள்ளலாம்.

## மேலும் மாநில அளவிலான தொடர்புக்கு

**பிற்படுத்தப்பட்டோர் நல இயக்ககம்**
இயக்குநர்,
பிற்படுத்தப்பட்டோர் நல இயக்ககம்,
சேப்பாக்கம், சென்னை-5. (தொலைபேசி எண் : 044 2855 1462)
மின்னஞ்சல் முகவரி : dir-bcmw@tn.nic.in

**மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல இயக்ககம்**
இயக்குநர்,
மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல இயக்ககம்,
சேப்பாக்கம், சென்னை-5. (தொலைபேசி எண் : 044 2841 0035)
மின்னஞ்சல் முகவரி : dir-bcmw@tn.nic.in